# நெல்லையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற – கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின்
# மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழா நிகழ்ச்சிகள்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், இயேசு கிறிஸ்து பிறப்பை குறிக்கும் கிறிஸ்துமஸ் குடிலை திறந்து வைத்தார். இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் – கே.என். நேரு, எ.வ. வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி. பி. கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, பி.வில்சன், ராபர்ட் புரூஸ், டாக்டர் ராணி ஸ்ரீகுமார், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் முனைவர் இனிகோ இருதயராஜ், அப்துல் வகாப், ரூபி மனோகரன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை முன்னாள் தலைவர் ஆவுடையப்பன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ், சீரோ – மலங்கரா கத்தோலிக்க திருச்சபை பேராயர் கிளிமீஸ் பாசெலோயிஸ், கத்தோலிக்க ஆயர் பேரவை தலைவர் பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி, மதுரை மாவட்ட பேராயர் அந்தோணிசாமி சவரிமுத்து, தென்னிந்திய திருச்சபை பேராயர் பர்ணபாஸ், சாந்தோம் பேராலய அதிபர் அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை உள்ளிட்ட பேராயர்கள், அய்யா வழி சமய தலைவர் பாலபிரஜாபதி அடிகளார், ஸ்ரீமத் பரசமய கோளரி நாதர் ஆதினம் சரஸ்வதி பரமச்சாரிய சுவாமிகள், பேராசிரியர் முகமது இல்யாஸ் உஸ்மானி, ஜாமியா மஜீத் முதன்மை இமாம் மௌலவி கே.ஏ. அப்துல் அலிம், உலக அமைதி புத்தர் கோயில் புத்தப்பிக்கு மசோவ் இஸி தானீஜீ, சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை ஜோ. அருண், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் பெர்னான்டஸ் ரத்தினராஜா, கிறிஸ்துவ தேவாலயங்களின் தலைமை போதகர்கள், பெருந்திரளான கிறிஸ்துவ சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், சான்டா கிளாஸ் வேடமணிந்த குழந்தைகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், தென்னிந்திய திருச்சபையின் திருநெல்வேலி திருமண்டலம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சாராள் தக்கர் கன்வென்ஷன் சென்டர் பிரதான நுழைவாயிலை திறந்து வைத்தார்.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2025) திருநெல்வேலியில் கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில், கிறிஸ்துமஸ் கேக் வெட்டி, கிறிஸ்துவ, இஸ்லாமிய, இந்து, புத்தபிக்கு உள்ளிட்ட பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு ஊட்டினார்.

---




திருவெறும்பூர் அருகே உள்ள துவாக்குடி ராவுத்தான்பட்டியில் ரூபாய் 1.32 லட்சம் மதிப்பீட்டில் எந்திரவியல் ஆய்வக அறை உட்பட எட்டு வகுப்பறைகள் கட்டிடத்தை அமைச்சர்கள் கே.என். நேரு, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் திறந்து வைத்தனர், இதில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி, வடலூர் நகராட்சி, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி வார்டு பகுதிகளில் தமிழ்நாடு தலைகுனியாது “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். தொகுதி பொறுப்பாளர் அங்கயற்கண்ணி, ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.